கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அனுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 122 | 07-11-2025 | வெள்ளி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 122 | 07-11-2025 | Friday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## 'பிஹாரில் தே.ஜ.கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும்பான்மை கிடைக்கும்': பிரதமர் மோடி



புதுடெல்லி: நவ.7–

பிஹார் சட்டப் பேரவை தேர்தலில் முதல் கட்ட வாக்குப் பதிவு நடைபெற்று வரும் நிலையில், 'வாக்காளர்களிடையே காணப்படும் உற்சாகம், தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும் பான்மை கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிஹார் சட்டப் பேரவை தேர்தலின் இரண்டாம் கட்டத்திற் கான தேர்தல் பிரச்சாரத் தின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி உரையாற்றினார். அராரியா மாவட்டத்தின் ஃபோர்ப்ஸ்கஞ்சில் நடைபெறும் பொதுக் கூட்டம் மற்றும் பகல்பூரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'பிஹாரில் நடைபெறும் ஜனநாயகத்தின் மாபெரும் திருவிழா மக்களிடையே அற்புத மான உற்சாகத்தைக் காண்கிறது. இது சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜன நாயகக் கூட்டணிக்கு முன்னெப்போதும் இல்லாத பெரும் பான்மை கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது. இந்த உற்சாகமான சூழ்நிலையில், அராரி யாவின் ஃபோர்ப்ஸ்கஞ் சில் காலை 11:30 மணியளவில் மற்றும் பகல்பூரில் பிற்பகல் 1:30 மணியளவில் நடைபெறும் பொதுக் கூட்டங்களில் எனது குடும்ப உறுப்பினர்களின் ஆசீர்வாதங்களைப் பெற ஆவலாக உள்ளேன்' என்று தெரிவித்தார்.

பிஹார் சட்டப்பேரவையில் மொத்தம் உள்ள 243ல் 121 தொகுதிகளில் இன்று முதல்கட்ட தேர் தல் நடைபெறுகிறது. 18 மாவட்டங்களை உள் ளடக்கிய இந்த தொகுதி களில் மொத்தம் 122 பெண்கள் உள்ளிட்ட 1,314 வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர். வாக்காளர்கள் எண் ணிக்கை 3.75 கோடி. மொத்தம் 45,341 வாக் குச்சாவடிகள் அமைக் கப்பட்டுள்ளன

## நெல்லை தொகுதியில் தோற்றால் பதவி பறிக்கப்படும்: திமுக நிர்வாகிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை: நவ. 7–

நெல்லை தொகுதியில் தோற்றால் திமுக நிர்வாகிகளின் பதவி பறிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழ்நாட்டில் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் திமுக தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றது. அதன்படி, பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை என பல்வேறு நடவடிக்கைகளை திமுக மேற்கொண்டு வருகிறது.



குறிப்பாக, நிர்வாகிகளை சந்திக்கும் விதமாகவும், தொகுதியில் கட்சி செயல்பாடுகள், வெற்றி வாய்ப்பு, அதற்கு மாவட்ட நிர்வாகிகள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பது குறித்து ஒவ்வொரு நிர்வாகியையும் நேரடியாக சந்தித்து பேசக்கூடிய வகையில் தான் உடன்பிறப்பே வா என்ற தலைப்பில் திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சி நிர்வாகிகளுடன் திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தினார். அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 'ஒன்டூ ஒன்' சந்திக்கும் உடன்பிறப்பே வா நிகழ்ச்சியில் இன்று சங்கரன்கோவில், நெல்லை தொகுதி திமுக நிர்வாகிகளை சந்தித்தார். அதில் தெற்கு மண்டல பொறுப்பாளர் கனிமொழி எம்.பி.யும் பங்கேற்றிருந்தார்.

இந்த ஆலோசனையின் போது தொகுதியில் கட்சி செயல்பாடுகள், கள நிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையில் ஈடுபட்டார். இந்நிலையில் நெல்லை தொகுதியில் வெற்றி பெறவில்லையென்றால் பதவிகள் பறிக்கப்படும் என்று மாவட்டச் செயலாளர் உட்பட அனைத்து நிர்வாகிகளுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரடி எச்சரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## நவ. 7ல் 'வந்தே மாதரம்' பாடலின் 150வது ஆண்டு விழா தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாட பாஜக வேண்டுகோள்

சென்னை: நவ.7–

இன்று நடைபெற உள்ள வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150 வது ஆண்டு விழாவை தமிழக மக்கள் சிறப்பாக கொண்டாட வேண்டும் என தமிழக பாஜக செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று, இந்தியாவின் தேசிய பாடலான வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் தமிழக மக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் உள்ள குழந்தைகள் அனைவரையும் ஊக்குவித்து குடும்பத்துடன் கொண்டாட வேண்டும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாரதத்தின் அனைத்து மக்களுக்கும் தேசபக்தியை ஊட்டி வளர்த்த, வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு விழா தமிழக மாணவர்கள் இளைஞர்கள் பள்ளி கல்லூரிகளில் விழாக்களை நடத்த தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த தேச பக்தி திருவிழாவில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ளும் வகையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் உரிய வழிகாட்டலை தமிழக அரசின் அனைத்து துறைகளுக்கும் வழங்க வேண்டும்.

இன்று (நவம்பர் 7) நடைபெற உள்ள 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு விழா கொண்டாட்டத் தில் மக்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

மன்கி பாத் என்ற பெயரில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிரதமர் மோடி மக்களுடன் மனம்திறந்து பேசி வருகிறார். இதன் 127 வது உரையை கடந்த அக்30ஆம் தேதி ஞாயிறன்று வழங்கிய அவர், 1896 ஆம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் முதன்முதலாக இந்தப் அற்புத பாடலைப் பாடிய வரலாற்றையும், நாட்டுப்பற்று உணர்வை எழுப்பும் முக்கியமான ஆயுதமாக இந்தப் பாடல் தொடர்ந்து செயல்பட்டு வருவதையும் பிரதமர் மோடி நினைவு கூர்ந்தார்.

வந்தே மாதரம் என்கிற தேசபக்தி மந்திரச் சொல் ஒவ்வொரு இந்தியனின் மனதிலும் அளவற்ற உணர்ச்சியையும் பெருமையையும் ஏற்படுத்துகிறது. இந்தப் பாடல் தலைமுறைகளை இணைத்து, தேசத்தின் ஒற்றுமை ஒருமைப்பாட்டிற்கு வலு சேர்க்கும் விதத்தில் மக்கள் மனதில் அன்பை விதைத்துவரும் தேசிய உணர்வின் குறியீடு என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார். மேலும்,140 கோடி இந்தியர்களின் ஒற்றுமைக்கும் 'வந்தே மாதரம்' பாடல் ஒருங்கிணைந்த குரலாக ஒலித்து வருகிறது. துன்பங்கள் வந்த தருணங்களில் "'வந்தே மாதரம்' என்றமுழக்கம்நம் அனைவரையும் ஒன்றிணைத்து உற்சாகம் தருகிறது. மேலும் வந்தே மாதரம் பாடலை ஒலிப்பவர்களின் மனதில் சக்திமிகு பாரத மாதாவின் பெருமையை , வலிமையை உணர்த்தி சக்தியை அளிக்கும் சிறப்பு கொண்டது என்று பிரதமர் உணர்ச்சி பொங்க பேசினார்.

வந்தே மாதரம் பாடலை எழுதிய பாங்கிம் சந்திர சட்டோபாத்யாயை நாடு என்றும் மறக்காது, அவர் நாட்டின் சுதந்திர உணர்வை ஊக்குவிக்க எழுதிய, இந்த அற்புத படைப்பு நூற்றாண்டுகளாக இந்தியாவின் உயிரோட்டமாக உள்ளது . "19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டாலும், இந்திய மரபின் பல்லாயிரம் ஆண்டு சிந்தனையோடு இந்தப் பாடல் ஆழமாக இணைந்துள்ளது" என்றும் மோடி பெருமையுடன் குறிப்பிட்டார்.

'வந்தே மாதரம்' கொண்டாட்டத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பங்களிப்பை மிகச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் . நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இந்த விழாக்களில் பங்கேற்று, வந்தே மாதரத்தின் பாரம்பரியத்தையும், இந்திய உணர்வையும் உயர்த்த பங்களிக்க வேண்டும் என பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று, தமிழக மக்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள தேசபக்தி இயக்கங்கள் , தேசிய சிந்தனையாளர்கள் நவம்பர் 7 ஆம் தேதி நடைபெறும் இந்தியாவின் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை, கிராமங்கள் நகரங்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் தேசபக்தி திருவிழாவாக சிறப்பாக கொண்டாட அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும்.

அனைத்துமாவட்டங்களிலும் கலை, இலக்கிய போட்டிகள் , சுதேசி பொருள்களை ஊக்குவிக்கும் கண்காட்சிகள் உள்ளிட்ட விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் மிகப்பெரிய பங்கையும், தமிழக மக்களின் வீரத்தையும் விவேகத்தையும் பண்பாடு கலாச்சாரம் நாகரீகத்தையும் போற்றும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள், பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள், கருத்தரங்கங்கள் என அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்து பொதுமக்களில் அனைவரும் வந்தே மாதரம் பாடல் பிறந்த 1050 ஆவது ஆண்டு விழாவை தங்களது தனித் திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டாடும் வண்ணம் சிறந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

சாதி, மத, இன பாகுபாடு இல்லாமல் கட்சி பேதங்களை மறந்து, அரசியலுக்கு அப்பாற்பட்டு, பல நூறு ஆண்டுகளைக் கடந்த இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தியாக வரலாற்றையும், 75 ஆண்டுகளுக்கு மேலான இந்திய சுதந்திரத்தின் மகிழ்ச்சியையும் வெற்றியையும் மனமகிழ்ந்து கொண்டாடும் வகையில், தமிழக அரசும் "வந்தே மாதரம் " திருவிழாவை தமிழக மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

அதேபோன்று தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும், சமூகநல இயக்கங்களும், சமுதாய அமைப்புகளும், அனைத்து சங்கங்களும் , தொண்டு நிறுவனங்களும் , மக்கள் நல இயக்கங்களும் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடைய அன்பான அழைப்பை ஏற்று, பிரதமருடன் இணைந்து வரும் நவம்பர் 7ஆம் தேதி நடைபெறும் இந்தியாவின் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு விழா கொண்டாட்டங்களை சிறப்பாக கொண்டாடி தேசிய நீரோட்டத்தில் தமிழகத்தின் வலிமையான பங்களிப்பை அளிக்க வேண்டும்.

தமிழக பாஜகவும் வந்தேமாதரம் பாடலின் 150 வது விழா திருநாளை மிகச் சிறப்பாக தமிழக மக்களுடன் இணைந்து கொண்டாட இருக்கிறது. தமிழக மக்கள் அனைவரும் பிரதமரின் அழைப்பை ஏற்று தமிழக பாஜக நடத்த உள்ள வைத்து கொண்டாட்டங்களிலும் தமிழக மக்கள் குடும்பத்துடன் பங்கு கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் குறிப்பாக தாங்கள் வசிக்கும் பகுதியில் தங்கள் வீடுகளில், தங்கள் அலுவலகங்களில் நவம்பர் 7 ஆம் தேதி அன்று தேசபக்தியை ஊட்டி வளர்த்த வந்தே மாதரம் பாடலை, குடும்பத்துடன் குழந்தைகளுடன், உறவினர்கள் நண்பர்கள், சக தொழிலாளர்களுடன் பாடி மகிழ்ந்து தங்களுடைய சமூக வலைதள பக்கங்களில் வெளியிட வேண்டுகிறோம்.

சுப்ரமணிய பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், சுப்ரமணிய சிவா, தேசியக் கொடி காத்த திருப்பூர் குமரன், ஆஷ் துரையை சுட்டுக் கொன்ற வீரர் வாஞ் சிநாதன், வீரத்துடன் தீரத்துடன் பங்கு கொண்ட அஞ்சலை அம்மாள் என அனைவரும் சுதந்திர தீயை ஊட்டி வளர்த்த வந்தே மாதரம் பாடலை, வீடுகளிலும், தெருக்களிலும், சுதந்திரப் போராட்டங்களிலும் சென்ற இடமெல்லாம் பாடி பாரத மக்களை ஒற்றுமைப்படுத்தி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்று தந்தார்கள்.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வலிமை சேர்க்க அன்றும் இன்றும் என்றும் நம் நினைவில் நிற்கக்கூடிய "வந்தே மாதரம்" முழக்கமும் பாடலும் சிறுவயதில் நாம் கேட்டு பாடி மகிழ்ந்து தேசபக்தியோடு செயல்பட்டது போல், நம்முடைய குழந்தைகள், மாணவர்கள், இளைஞர் இடத்திலும் கொண்டு போய் சேர்ப்பதற்கான வாய்ப்பாக வந்தேமாதரம் பாடலின் 150 வது விழா திருநாளை உள்ளம் குளிர, எண்ணம் சிறக்க, மறைந்த தியாகிகள் நினைவைப் போற்றி மகிழ்ந்து, தேசபக்தி செழிக்க தமிழகமெங்கும் நம்முடைய இல்லங்கள் தோறும் கொண்டாட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலை.யில் மாணவிகளுக்கு பட்டம் ஆளுநர் ரவி வழங்கினார்!




கொடைக்கானல்: அன்னை தெரசா பல்கலை.யில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது தமிழக ஆளுநர் ரவி மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார்.

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் வியாழக்கிழமை (நவ.6) காலை நடைபெற்ற விழாவில் மாணவிகளுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பட்டங்களை வழங்கி பாராட்டினார். கொடைக்கானல் அருகே அட்டுவம்பட்டியில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் 32வது பட்ட மளிப்பு விழா வியாழக் கிழமை (நவ.6) காலை 10.30 மணிக்கு நடை பெற்றது. துணை வேந்தர் கே.கலா வரவேற்றார்.

பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான ஆர்.என். ரவி, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஒடிசா பெர்ஹாம்பூர் பல்கலைக்கழக துணை வேந்தர் கீதாஞ்சலி பேசியதாவது: அன்னை தெரசாவின் கூற்றுப்படி, கல்வியின் சாராம்சம் அறிவின் குவிப்பாக மட்டுமல்ல, இரக்கம், பணிவு மற்றும் சேவையை வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டும்.

கல்வி என்பது மாற்றத்திற்கான மிக சக்தி வாய்ந்த கருவி. இது தன்னம்பிக்கையை உருவாக்குகிறது. சுதந்திரத்தை வளர்க்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக தொழில், நம்பிக்கைகள் மற்றும் சமூகத்திற்கு உங்கள் பங்களிப்பை தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை கல்வி உங்களுக்கு வழங்குகிறது.

அதீத ஆர்வம் கொள்ளுங்கள், மீள் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள். மற்றவர் களின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள். உண்மையான தலைமை பண்பு என்பது மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்து வது அல்ல. அன்புடன் யாவரையும் தலைமை பண்பு உடையவர்களாக மாற்றுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், 58 மாணவிகளுக்கு முனைவர் பட்டமும், பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற 19 மாணவிகள் உட்பட 376 பேருக்கு நேரடியாக ஆளுநர் ஆர்.என்.ரவி பட்டங்களை வழங்கி பாராட்டினார். மேலும், 8,110 பேருக்கு அஞ்சல் வழியாக பட்டம் வழங்கப்பட்டது. விழாவில், பதிவாளர் (பொ) ஜெயப்பிரியா, தேர்வு கட்டுப்பாடு அலுவலர் கிளாரா தேன்மொழி, நிதி அலுவலர் (பொ) ஹெனா ஷரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக் கழக இணை வேந்தரும், தமிழக உயர்கல்வித்துறை அமைச்சருமான கோவி. செழியன் பங்கேற்கவில்லை. விழா முடிந்து, ஆளுநர் பிற்பகல் 3 மணிக்கு கொடைக்கானலில் இருந்து புறப்பட்டு மதுரை சென்று, அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார்.

## செஞ்சி ஒன்றியம் தென் புதுப்பட்டு ஊராட்சியில் ரூ 2.60 கோடி மதிப்பீட்டில் தளவானூர் வழியாக தென்புதுப்பட்டு, கொம்மேடு சாலையை அகலப்படுத்தி புதியதார்சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்......



விழுப்புரம். நவ. 7–

விழுப்புரம் மாவட்டம் நெடுஞ் சாலைத்துறை சார்பில் செஞ்சி ஒன்றியம் விழுப்புரம் சாலை முதல் தளவானூர் வழியாகதென் புதுப்பட்டு, கொம்மேடு, செல்லும் சாலையை 2கோடியே 59லட்த்தி 80ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில்ஒரு வழி தடத்திலிருந்து இடைவழித் தடமாக மாற்றி அகலப்படுத்தி சாலையை வலுப்படுத்துதல் பணிக்கு பூமி பூஜை விழா தென்புதுப்பட்டு ஊராட்சியில் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ் செழியன், நெடுஞ்சாலை துறை செஞ்சி உட்கோட்ட பொறியாளர் அக்பர் அலி, உதவி பொறியாளர்கள் விஷ்ணு பிரியா, பாலாஜி,முன்னாள் மாவட்ட கவுன்சிலர் தனசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சம்பத்குமார்,ஒன்றிய பிரதிநிதிகள் அய்யாதுரை, கோட்டீஸ்வரன், 'ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வேலுச்சாமி,நிர்வாகிகள் அருள், ஆல்பர்ட்,ரங்கநாதன், குப்புசாமி, சங்கர், வெள்ளக் கவுண்டர்,காசி, சேகர், சம்பத், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாடு நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மனு..

### மாநில பாஜக தலைவர் நைனார் நாகேந்திரனிடம் பல்வேறு கோரிக்கை முன்வைப்பு..



ஈரோடு நவ .07

ஈரோடு வருகை தந்திருந்த மாநில பாஜக தலைவர் நைனார் நாகேந்திரனை நேரில் சந்தித்த தமிழ்நாடு நெசவாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் பல்வேறு கோரிக்கை மனுக்களை கொடுத்தனர்.

அந்த கோரிக்கை மனுவில் அவர்கள் தெரிவித்திருந்தாவது...

கடந்த 2025 பொங்கல் பண்டிகைக்கு அரசாணை எண் 124/நான் 27.8. 2024 இன் படி 1.77.. 64 . 476 சேலைகளும், 1.77..22..995 வேட்டி களும் விசைத்தறியில் நெசவு செய்ய அரசாணை வழங்கப்பட்டது.

ஆனால் 2026 பொங்கலுக்கு அரசாணை எண். 69.. 11/04/2025 ன் படி 146.10 லட்சம் சேவைகளும், 144.10 லட்சம் பேட்டிகளும் உற்பத்தி செய்ய அரசாணை வழங்கப்பட் டுள்ளது.

இதில் 8.34 லட்சம் சேவைகளும் 13. 43 லட்சம் வேஷ்டிகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திடமும், (டி என் சி எஸ் சி) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் இடமும் (ஆர் சி எஸ்) இருப்பு உள்ளதாக கூறி அதனை கழித்துக் கொண்டு மீதி, 146 .10 பத்து லட்சம் சேவைகளும், 144.10 வேட்டிகளும் உற்பத்தி செய்ய கூறியுள்ளார்கள்

கடந்த 31/12/2024 தேதியில் விசைத்தறி கூட்டுறவு சங்கங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வேட்டி சேலைகள் உற்பத்தியை தயார் செய்து விட்டார்கள். அதனை அரசிடம் இருந்து ரேஷன் கடைகளில் வினியோகம் செய்வதற்காக கொள்முதல் செய்யப்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு விட்டது. நாள் அதன்பின்பு பொங்கலுக்கு வழங்க வேண்டிய இலவச வேட்டி சேலைகளை 31/3/2025 வரையிலும் கூட வழங்காமல் மேற்கண்டவாறு இருப்பினை வைத்துள்ளது, மிகவும் வருந்தத்தக்கது.

இறந்த வருடம் பொங்கல் வேஷ்டி சேலைகளுக்கான உற்பத்தி திட்டம் முழுவதும் விசைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்குவழங்கப்பட்டது. ஆனால் இந்த வருடம் 240 விசைத்தறி கூட்டுறவு சங்கங்களில் 65,000 விசைத்தறிகள் இருக்கும் போது 12,882 விசைத்தறிகளில் 10066059 சேலையும் 13.424 விசைத்தறிகளில் 12880965 வேட்டியும் என 26 ஆயிரத்து 35 தரிகைகள் மட்டுமே போட்ட கூலி அளவுக்கு உற்பத்தி ஆணை வழங்கப்பட்டது. கடந்த மாதம் 549 422 வேட்டிகள் அதிகம் உற்பத்தி செய்ய குறிப்பானை கொடுத்து உள்ளார்கள்.

ஏற்கனவே வீழ்ச்சியில் உள்ள விசைத்தறி துறையில் இவ்வாறு உற்பத்தியை குறைத்து இருப்பது, மேற்கு மண்டலத்தில் உள்ள ஈரோடு, திருச்செங்கோடு, திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கனவே தொழில் இல்லாமல் கிட்னியை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு மேலும் துன்பம் தரும் விதமாக, இவ்வாறு உற்பத்தியை குறைத்து உள்ளது. மிகுந்த வருத்தத்திற்கு உரியது.

எனவே கடந்த வருடம் போல் நூத்தி எழுவத்தி ஏழு லட்சம் சேலைகளும், 177 லட்சம் வேட்டிகளும் விசைத்தறியிலேயே உற்பத்தி செய்வதற்கு அதற்குரிய அரசாணை வெளியிட உரிய நடவடிக்கை எடுக்க பாஜக மாநில தலைவர் அரசை வலியுறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

## திருவள்ளூரில் குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு பிரச்சார பேரணி

### மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் துவக்கி வைத்தார்



திருவள்ளூர் நவ 07 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ஒன்றிய அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறையின் கீழ் செயல்படும் மேரா யுவ பாரத் சார்பில் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு 300க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்ட மாவட்ட அளவிலான ஒற்றுமை விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தொடங்கி ஜே.என். சாலை காமராசர் சிலை வரை பேரணி நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு பிரச்சார பேரணியை மாவட்ட ஆட்சியர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

குழந்தை திருமண தடுப்புச் சட்டம், இளவயது கர்ப்பத்தால் ஏற்படும் பாதிப்புகள். பெண் கல்வியின் முக்கியத்துவம், பாலின தேர்வு மற்றும் பெண் சிசு கொலைகளை ஒழிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், விழிப்புணர்வு படங்கள் மற்றும் வாசகங்கள் பொருத்தப்பட்ட ஒலிச் செய்தியுடன் கூடிய வாகனம் (ம) பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையத்தின் சேவைகள், குழந்தைகள் உதவி எண். பெண்களுக்கான உதவி எண் (ம) முதியோர் உதவி எண் குறித்த விவரங்கள் அடங்கிய பெண்களுக் கான ஒருங்கிணைந்த சேவை மையத்தின் அடையாள ஒப்பந்த வாகனத்தை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார். பெண்களுக்கான இலவச உதவி எண் 181, குழந்தைகளுக்கான இலவச உதவி எண் 1098, முதியோருக்கான இலவச உதவி எண் 14567 ஆகும்.

திருத்தியமைக் கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான விழிப் புணர்வு வாகன பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து விவசாயிகளிடம் துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.பேரணியில் மாவட்ட சமூக நல அலுவலர் சொ.வனிதா, வேளாண்மைத் துறை மற்றும் உழவர் நலத்துறை இணை இயக்குநர் (பொ) வே.பால்ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வேதவல்லி, விவசாயிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சி சார்பில் சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு SIR (Special Intensive Revision) சம்பந்தமான BLA 2 ஆகியோருக்கான பயிற்சிப் பட்டறை முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு மற்றும் உப்பளம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு முதலியார்பேட்டை, அகத்தியர் ஹாலில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் ஸ்ரீ V P ராமலிங்கம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார். BLA 2 பாரதிய ஜனதா கட்சியின் வாக்காளர் முகவர் 2 ஆகியோருக்கு சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு சம்பந்தமான பயிற்சி விளக்கங்களை பாஜக பொறுப்பாளர் க.வெற்றிச்செல்வம் வகுப்பு எடுத்தார். இந்தப் பயிற்சி பயிற்சி பட்டறையில் முதலியார்பேட்டை, நெல்லித்தோப்பு மற்றும் உப்பளம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 3 ஙிலிகி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு அசோக் பாபு மாவட்ட பொறுப்பாளர் திரு. ரத்தினவேல், மாவட்ட தலைவர் கிருஷ்ணராஜ், தேர்தல் பிரதிநிதி தமிழ்மாறன், மாநில பொதுச் செயலாளர் மற்றும் தொகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட அணி பிரிவு நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இருளர் இன மக்கள் வீட்டுமனை பட்டா கேட்டு வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு...!



வந்தவாசி, நவ 07:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த எஸ்.மோட்டூர், நாவல்பாக்கம், சத்யா நகர் உள்ளிட்ட பகுதிகளில் வசித்து வரும் பழங்குடி இன மக்கள் கடந்த 12ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டு மனை பட்டா இடம் கேட்டு போராடி வருகின்றனர். அதற்கான செயல்பாடு இன்னும் முடிவடையாத சூழலில் புதிதாக பொறுப்பேற்றுள்ள வந்தவாசி வட்டாட்சியர் எஸ்.சம்பத்குமார் அவர்களிடம் முறையாக மனு அளித்தனர். கோட்டை மூலை பகுதியில் இருந்து மனுக்களை கையில் ஏந்தி ஊர்வலமாக வந்து வட்டாட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. அப்போது சமூக பாதுகாப்பு வட்டாட்சியர் உதயகுமார் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர். மேலும் இந்த நிகழ்வில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வட்டார செயலாளர் அப்துல் காதர், நகர செயலாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட குழுவினர் சுகுணா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## துவரங்குறிச்சி அருகே ஆனந்த பவன் ஹோட்டலில் தேநீர் அருந்திவிட்டு சென்று பார்த்த ஓட்டுநர் தனியார் பேருந்தில் பயணித்த பயணி இறந்த நிலையில் மீட்பு:

திருச்சி. நவ. 7–

திருச்சி மாவட்டம் , துவரங்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருச்சி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இயங்கி வரும் ஆனந்த பவன் ஹோட்டலில் சென்னையில் இருந்து TN 02 CB 1832 என்ற பதிவில் கொண்ட நேஷனல் (National) என்ற தனியார் பேருந்து, அப்பேருந்தில் பயணித்த தென்காசி மாவட்டம் , வேதம்புதூரைச் சேர்ந்த திருமலை குமார் மகன் முத்துராமன் (21) சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு வேலைக்கு செல்வதாக கூறி சென்றதாகவும் பின்பு கடந்த மூன்று நாட்களாக அதிக காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனது சொந்த ஊரான வருவதாக வேதம்புதூர் வீட்டிற்கு தகவல் தெரிவித்துள்ளார் . மேலும் இன்று சென்னையில் இருந்து வீடு திரும்பிய போது துவரங்குறிச்சி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆனந்த பவன் ஹோட்டலில் தனியார் பேருந்து ஓட்டுனர் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தியுள்ளார் , சிறிது நேரம் கழித்து தேநீர் அருந்திவிட்டு பஸ்சை இயக்கச் சென்றபோது பயணித்த பயணியை பரிசோதனை செய்ய உடன் நடத்துநர் முத்துராமன் என்பவர் எவ்வித அசைவுமின்றி இருந்ததால் பேருந்து ஓட்டுனர் 100 க்கு தகவல் தெரிவித்தன நிலையில் தகவல் அறிந்து வந்த துவரங்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளர் விஜய் கோல்டன்சிங் நேரில் சென்று விசாரணை செய்த மேற்கண்ட நபரை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவ பரிசோதனை செய்த போது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர் கூறியதை அடுத்து இறந்து போன முத்துராமனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் துவரங்குறிச்சி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.



கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பெயரில் பண்ருட்டி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் பண்ருட்டி நகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் பண்ருட்டி போக்குவரத்து காவல் ஆய்வாளர் பரமேஸ்வர பத்மநாபன் அவர்களின் தலைமையில் உதவி ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து காவலர்கள் நகரின் பிரதான சாலையாக விளங்கும் ராஜாஜி சாலை மார்க்கமாக இயங்கும் அனைத்து ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் ஆட்டோ உரிமையாளர்களுக்கு சாலை பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு தட்டாஞ்சாவடி காளியம்மன் கோவில் திடலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆட்டோ ஓட்டுநர்கள் முறையான ஓட்டுநர் உரிமம், தகுதி சான்றிதழ், காப்பீடு சான்றிதழ் நடைமுறையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தியும், அதிகப்படியான பள்ளி மாணவர்களையும், பொது மக்களையும் பயணம் ஏற்றி செல்ல கூடாது எனவும், குடிபோதையில் வாகனம் இயக்கக் கூடாது எனவும், அதிக ஒலி எழுப்பக் கூடிய Air Horn உபயோகிக்க கூடாது என எச்சரித்தும், ராஜாஜி சாலையில் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் வாகனங்களை இயக்க வலியுறுத்தினர்



விழுப்புரம் மாவட்டம் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேல்மலையனூர் ஒன்றியம்வேலந்தாங்கல்,தாயனூர் வழியாக ஆத்திப்பட்டுசெல்லும் சாலையை 3 கோடியே 12 லட்த்தி 25 ஆயிரம்ரூபாய் மதிப்பீட்டில்ஒரு வழி தடத்திலிருந்து இடைவழித் தடமாக மாற்றி அகலப்படுத்தி சாலையை வலுப்படுத்துதல் பணிக்கு பூமி பூஜை விழா தாயனூர் ஊராட்சியில் நடைபெற்றது. மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா ராஜேஷ் குமார் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ் செழியன், நெடுஞ்சாலை துறை செஞ்சி உட்கோட்ட பொறியாளர் அக்பர் அலி, உதவி பொறியாளர்கள் விஷ்ணு பிரியா, பாலாஜி,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் ஜெயலட்சுமி தக்ஷிணாமூர்த்தி,ராஜா நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத், அரிதாஸ்,தோப்பு சம்பத்,செல்வம், சிவா, ரஜினி,காமராஜ்,ராஜ்குமார்,இளைஞர் அணி தாஸ், ஹரிஷ்,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதை சேலம் மாவட்டம் சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தவைர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

# அரியலூர் டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வாங்க மாவட்ட மேலாண்மை மேலாளர் மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தான் காரணம் என குற்றச்சாட்டு

அரியலூர். நவ. 7–

காலி பாட்டில்கள் வாங்குவதற்கு மாற்று தொழிலாளர்களைக் கொண்டு அத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என டாஸ்மாக் விற்பனையாளர்கள் சங்க மாநில சிறப்பு தலைவர் வலியுறுத்தி உள்ளார்

அரியலூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்கத்தில் மாநில செயற்குழு கூட்டம் அச்சங்கத்தின் சிறப்பு தலைவர் பாரதி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் டாஸ்மாக் விற்பனையாளர்கள் நல சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இக்கூட்டத்தில் டாஸ்மாக் விற்பனையாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்பேறு கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.

பின்னர் சங்க மாநில தலைவர் பாரதி செய்தியாளர்களை சந்தித்தார் அப்பொழுது தற்போதுள்ள அரசு தேர்தலுக்கு முன்பு கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற



வேண்டும் அரசுத்துறைகளில் 10 ஆண்டுகள் பணி புரிந்தவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை 2003ம் ஆண்டு 36 ஆயிரமாக இருந்த பணியாளர்கள் எண்ணிக்கை தற்போது 26 ஆயிரமாக குறைந்துள்ளது

ஆனால் காலி பணியிடங்களை நிரப்புவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பணியில் உள்ளவர்களின் பணி சுமையை அதிகரித்து கொத்தடிமையாக நடத்துகிறார்கள் டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வாங்கப்படும் பிரச்சினை தற்போது தீவிரமாக உள்ளது இதற்கு மாவட்ட மேலாண்மை மேலாளர் மற்றும் முதுநிலை மண்டல மேலாளர் தான் காரணமாக இருக்கிறார்கள் அவர்களின் தூண்டுதலின் பேரில் தான் பாட்டிலுக்கு பத்து ரூபாய் கூடுதலாக வாங்குவது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது அவர்களை உடனடியாக கைது செய்து சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கையை தமிழ் நாடு அரசு எடுக்க வேண்டும் டாஸ்மாக் பணியாளர்களை அரசு ஊழியர்களாக நிரந்தரப்படுத்தி அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் கொத்தடிமையாக வைத்து நசுக்கிறார்கள் என்றால் அது டாஸ்மார்க் துறை தான். அவர்களுக்கு எல்லாம் பிடித்தம் போக பத்தாயிரம் ரூபாய் தான் தருகிறார்கள் தீபாவளிக்கு 750 கோடி ரூபாய் வசூல் ஆனால் தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்க மனசு இல்லை என குற்றம் சாட்டினார். காலி பாட்டில்களை திரும்ப பெரும் திட்டத்தால் காலி பாட்டில்களை கடையில் வைப்பதற்கு இடமில்லை பத்துக்கு பத்து கடையில் எப்படி காலி பாட்டில்களை வைக்க முடியும். மற்றவர்கள் குடித்து விட்டு கடையில் வாங்கி வைப்பதால் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டு. இயற்கையை பாதுகாக்க வேண்டும் என சொல்கிறார்கள் ஆனால் மனிதனை முதலில் பாதுகாக்க வேண்டும் என்பது தெரியாமல் உள்ளது. எனவே இயற்கையை பாதுகாப்பது என்பது எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு மனிதனை பாதுகாப்பது முக்கியம். எனவே காலி பாட்டில்களை திரும்பப்பெறும் திட்டத்திற்கு மாற்று தொழிலாளர்களை நியமனம் செய்து திட்டத்தை செயல்படுத்த வேண்டும் எனக் கூறினார் எங்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை எங்களது போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தார்

# அரியலூர் மாவட்டத்தில் வேளாண் மைத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நலத்திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, நேரில் ஆய்வு.

அரியலூர். நவ. 7–

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட நாகமங்கலம் ஊராட்சி, தேளுர் ஊராட்சியில் வேளாண் மைத் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, (05.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரம், நாகமங்கலம் கிராமத்தில் PMKSY திட்டத்தில் 202425 ஆம் ஆண்டில் இரண்டு ஏக்கர் கரும்பு பயிருக்கு ரூ.1,29,000 மானியத் தொகையில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப் பட்ட கரும்புத்தோட்டத் தினை பார்வையிட்டு, நுண்ணீர் பாசன வசதியின் பயன்பாடு, கரும்பு விளைச்சல் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து தேளுர் கிராமத்தில் மானாவாரியில் ஒருங்கிணைந்த பண்ணையம் 202526 திட்டத்தில் ரூ.30,000 மானியத்தொகையில் வழங்கப்பட்ட கால் நடை, மண்புழு தொட்டி, தேனீபெட்டி மற்றும் பழக்கன்று, ஆகியவற்றை பார்வையிட்டு அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் தேளுர் ஊராட்சியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் 202526 கீழ் மக்காச்சோளம் சிறப்பு தொகுப்பு ஒரு எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட வயலினை பார்வையிட்டு செயல் விளக்க திட்டம், மக்காச் சோளம் விளைச்சல் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்தார். தொடர்ந்து தேளுர் ஊராட்சியில் கனகராஜ் என்பவரின் வயலில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் விதை பண்ணை திடல் நெல் (CR1009 SUB-1) பயிரிடப்பட்டுள்ளதை பார்வையிட்டு நெற்பயிர்களின் வளர்ச்சி குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.



அதனைத்தொடர்ந்து, தேளுர் கிராமத்தில் வாழைத் தோட்டத் தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், தேசிய எண்ணெய் வித்து இயக்கம், உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நிலக்கடலை, பயிறு வகை விவசாய பணிகளுக்காக இடுபொருட்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி,வழங்கினார். மேலும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தார்பாய் களை பார்வையிட்டு அதன் தரம், பயன்பாடு வசதிகள் உள்ளிட்ட தகவல்கள் குறித்து கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குனர் (பொ) .பாபு, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. பிரேமி, வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி, அரியலூர் வட்டாட்சியர் முத்துலெட்சுமி, வேளாண்மை அலுவலர் சிந்துஜா, இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# "தொல் குடித்தொடுவானம்" திட்டத்தின்கீழ் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் பயிற்சி முகாம் சேலம், மல்லூர் தி கொங்கு பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தகவல்

திண்டுக்கல். நவ. 7–

தமிழ்நாடு அரசு பழங்குடியினர் நலத்துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, பழங்குடியின இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையில் சிறப்பு திறன் மேம்பாட்டு மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி முகாமை நடத்தவுள்ளது. அரசின் முக்கியத் திட்டமான "தொல் குடித்தொடுவானம்" திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த அரிய முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் சர்வதேசத் தரத்திலான பயிற்சிகளைப் பெற்று, இளைஞர்கள் தங்களின் ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள இது ஒரு மிகச் சிறந்த வாய்ப்பாகும் என்று பழங்குடியினர் நலத்துறை தெரிவித்துள்ளது.

இந்த முகாம் 2025 நவம்பர் 8 (சனிக்கிழமை) அன்று சேலம், மல்லூரில் உள்ள தி கொங்கு பாலிடெக்னிக் கல்லூரியில் காலை 9:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை நடைபெறவுள்ளது. முகாமில் பங்கேற்கும் இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் ஜெர்மன் மொழி, கனரக மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி, துணை சுகாதாரப் படிப்புகள் (Allied Health Courses) மற்றும் டிராக்டர் உற்பத்தி மெக்கானிக் உள்ளிட்ட மதிப்புமிக்க பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இம்முகாமில் கலந்துகொள்ள 18 முதல் 33 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் தகுதியுடையவர்கள் ஆவர். பங்கேற்க விரும்பும் இளைஞர்கள், தங்கள் அதிகபட்ச கல்வித் தகுதி சான்றிதழ், ஆதார் அட்டை, சாதி சான்றிதழ், வங்கி கணக்குப் புத்தகம் மற்றும் 4 பாஸ் போர்ட் அளவு புகைப்படங்களுடன் நேரில் வர வேண்டும். முகாமில் கலந்து கொள்ள விரும்பும் பழங்குடியின இளைஞர்கள் உடனடியாக <https://forms.gle/1Jw nHdFLDhm gvTiS8><https://forms.gle/1Jw nHdFLDhmgvTiS8> என்ற இணைய முகவரியில் பதிவு செய்யலாம் அல்லது கூடுதல் தகவல்களுக்கு 95785 62978 மற்றும் 96556 67547 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். பழங்குடியின இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி, தொழில் வாய்ப்புகளை மேம்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சொத்து தகராறில் உருட்டுக்கட்டையால் தாக்கி அண்ணனை கொன்ற தம்பி.

சேலம். நவ. 7–

சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே சொத்து தகராறில் தம்பி உருட்டுக்கட்டையால் தாக்கியதில்,9 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த அண்ணன் பரிதாபமாக உயிரிழந்தார்.

வாழப்பாடி அடுத்த காட்டுவேப்பிலைப்பட்டி ஊராட்சி சேஷன்சாவடி பகுதியைச் சேர்ந்த சின்னய்யன் மகன்கள் ராஜேந்திரன் (55) மற்றும் ஆறுமுகம்(45)ஆகிய இருவரும் கூலித்தொழிலாளிகள். இருவருக்கும் திருமணமாகி மனைவி, குழந்தைகள் இருந்தும் குடும்ப பிரச்சனையால் தனித்தனியாக வாழ்ந்து வந்தனர். ஒரே வீட்டில் வசித்த இருவருக்கும் சொத்து பங்கீடு தொடர்பாக நீண்டநாள் தகராறு நிலவியது.

அக். 28 ஆம் தேதி, வீடு பங்கீடு குறித்து கடுமையான வாய்த்தகராறு ஏற்பட்டது. அப்போது ராஜேந்திரன் தம்பியிடம் "இங்கிருந்து வெளியேறு" என்று கூறியதனால் ஆத்திரமடைந்த ஆறுமுகம், உருட்டுக்கட்டையால் அண்ணனை தாக்கியுள்ளார். இதனால் ராஜேந்திரனுக்கு இரு கால்களில் முறிவும் தலையில் தீவிர காயமும் ஏற்பட்டது.

அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு உடனடியாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு கடந்த ஒன்பது நாட்களாக தீவிர சிகிச்சையில் இருந்த ராஜேந்திரன், சிகிச்சை பலனின்றி புதன்கிழமை இரவு உயிரிழந்தார்.

வாழப்பாடி போலீஸார் முதலில் தாக்குதல் வழக்காக பதிவு செய்திருந்த நிலையில், ராஜேந்திரன் மரணத்தைத் தொடர்ந்து வழக்கை கொலை வழக்காக மாற்றினர். தம்பி ஆறுமுகம் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி

## மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருச்சி. நவ. 7–

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி 01.01.2026ஐத் தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபட வில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதி செய்யும் பொருட்டு, திருச் சிராப்பள்ளி மாவட்டத்திற் குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 முதல் சிறப்பு தீவிர திருத்த பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சிறப்பு தீவிர திருத்த பணியில் திருச் சிராப்பள்ளி மாவட்டத் திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 2543 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கிடும் பணியில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதி களிலும் உள்ள 23,68,968 எண்ணிக்கையிலான மொத்த வாக்காளர்களில், நேற்று (04.11.2025) மற்றும் இன்று (05.11.2025) ஆகிய இரண்டு நாட்களில் 2,99,130 எண்ணிக்கை யிலான வாக்காளர்களுக்கு முன்நிரப்பப்பட்ட படிவங்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு, முன்நிரப்பப்பட்ட படிவங் களை பூர்த்தி செய்த வாக்காளர்களிடமிருந்து மீள பெறப்படும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் 145 முசிறி மற்றும் 146 துறையு+ர் ஆகிய சட்டமன்ற தொகுதி களில் நடைபெறும் சிறப்பு தீவிர திருத்த பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வே. சரவணன்;,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தும் பணி முன்னேற்ற அறிக்கைகளை கேட்டறிந்தார்.

மேலும் 141 திருச்சிராப்பள்ளி (கிழக்கு), 142 திருவெறும்பூர் மற்றும் 143 இலால்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் நடைபெறும் சிறப்பு தீவிர திருத்த பணியினை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் ./ மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பாலாஜி அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தும் பணி முன்னேற்ற அறிக்கைகளை கேட்டறிந்தார்.

# விருதுநகரில் கைதி தப்பியோட்டம்: 3 போலீசார் சஸ்பெண்ட்

விருதுநகர்: நவ. 7–

கைதி தப்பியோடியது தொடர்பாக எஸ்.எஸ்.ஐ., காவலர்கள் 2 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். திருட்டு வழக்கில் கேரள சிறையில் இருந்த கைதி பாலமுருகனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அழைத்து வந்துள்ளனர். அருப்புக்கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திவிட்டு அழைத்து சென்றபோது கைதி பாலமுருகன் தப்பியோடியுள்ளார். கைதி பாலமுருகன் தப்பியோடியது தொடர்பாக எஸ்.எஸ்.ஐ. நாகராஜன், காவலர்கள் ரவிஜோதி, சுதாகர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 8 ம் தேதி குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் தொடர்பான குறைதீர் முகாம்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் நவ 07 :

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், பிரதிமாதம் இரண்டாவது சனிக்கிழமைகளில் ஒவ்வொரு வட்டங்களிலும், பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாம்கள் நடத்தப்பட வேண்டும் என்ற அறிவுரைகளின்படி, குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் தொடர்பான நவம்பர் 2025 மாதத்திற்கான குறைதீர் முகாம் 08.11.2025 சனிக்கிழமை அன்று வட்ட அளவில், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்ட வழங்கல் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி வட்ட அளவில் நடைபெறும் குறைதீர் முகாமில் பொதுமக்கள் தங்கள் மின்னணு குடும்ப அட்டையில் திருத்தங்கள் மற்றும் புகைப்படம் பதிவு செய்தல் தொடர்பான விண்ணப் பங்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம்.

மேலும், தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறும் முன்னுரிமை குடும்ப அட்டைகள் மற்றும் அந்த்யோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டை வைத்திருக்கும் குடும்ப அட்டைதாரர்கள், அக்குடும்ப அட்டையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்களது விரல்ரேகையை பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், இதுவரை விரல் ரேகையை பதிவு செய்யாதவர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகில் உள்ள நியாயவிலைக் கடைகளில் 25.11.2025 க்குள் தங்களது விரல்ரேகையை பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக எம் எல் ஏ வை தாக்குதல் நடத்தியதால் பாமகவினருக்கு பாதுகாப்பு வழங்க வலியுறுத்தி முன்னாள் பாமக எம்எல்ஏ எஸ்பியிடம் புகார்

திருவள்ளூர் நவ 07 :

பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகளை தாக்கும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்புமணி ஆதரவாளர்கள் தாக்குதல் நடந்த வாய்க்கு வாய்ப்பு இருப்பதால் பாதுகாப்பு வழங்கிய வேண்டும் என்றும் பாமக முன்னாள் எம்எல்ஏ., கோ. ரவிராஜ் மாவட்ட எஸ்பியிடம் புகார் அளித்தார்.அந்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனராகவும், தலைவராகவும் டாக்டர் ச. இராமதாஸ் செயல்பட்டு வருகிறார்.



கடந்த 36 ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது அவருக்கு எதிராக ஒரு குழு செயல்பட்டு கொண்டு பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிரான சிந்தனைகளுடன் செயல்பட்டு வருகிறது.அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் சேலம் மாவட்டம் சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் இரா. அருள் கட்சி நிர்வாகி இல்ல இறப்பு செய்தி கேட்டு அஞ்சலி செலுத்த சென்றுள்ளார்.

அப்போது ஏத்தாப்பூர் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட மத்தூர் தழை பாலம் அருகே ஆத்தூரை சேர்ந்த ஜெயப்பிரகாஷ் என்பவர் தலைமையில் ஒரு கும்பல் சட்டமன்ற உறுப்பினர் இரா. அருளின் காரையும் அவருடன் பயணித்தவர்கள் காரையும் காவலர்கள் முன்பே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் உடன் பயணித்த பல நிர்வாகிகளுக்கு காயங்கள் ஏற்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.சட்டமன்ற உறுப்பினரை கொலை செய்ய வேண்டும்என்றுஜெயப்பிரகாஷ், மணி ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில் சட்டமன்ற உறுப்பினரை தாக்கியதும், இந்த கும்பல் அன்புமணி பெயரை உச்சரித்ததாகவும் கூறப்படுகிறது . அன்புமணி தூண்டுதலின் பேரில் பேரில் பிற மாவட்டங்களிலும் பாமகவினர் மீது தாக்குதல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

டாக்டர் ராமதாசுக்கு எதிராகவும், எங்களுக்கு எதிராகவும் செயல்படுகின்ற அன்புமணி தலைமையிலான குழுவினரிடமிருந்து பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த அனைத்து தொண்டர்களை பற்றியும் சமூக ஊடகங்களில் தொடர்ந்து அவதூறுகளை கிளப்பி வரும் இது போன்ற குழுவினர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைதி பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தை ஒரு கலவர பூமியாக மாற்றுவதற்கான திட்டத்தை அந்த குழுவினர் திட்டமிட்டு உள்ளனர். ஆகவே பாட்டாளி மக்கள் கட்சிக்கும் அதன் பொறுப்பாளர்களுக்கும் எதிராக செயல்படுகின்ற அந்தக் குழுவினர் மீதும் , பாமகவின் இணை பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா. அருள் மீது நடத்தப்பட்ட சம்பவத்திற்கு காரணமானவர்களை தமிழக காவல்துறை உடனடியாக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட வேண்டும். அவருக்கு உடந்தையாக இருந்த நடர்கள் ஆதரவாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.



தமிழக முதல்வர் சென்னையில் காணொளி காட்சி வாயிலாக ரூ.23 கோடி மதிப்பில் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்தப்பட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையினை பயன்பாட்டிற்கு திறந்து வைத்ததைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

# தமிழக அரசியலில் சில வாரங்களில் பெரிய மாற்றம் அன்புமணி நம்பிக்கை

சென்னை. நவ. 7–

தமிழக அரசியலில் அடுத்த சில வாரங்களில் பெரிய மாற்றங்கள் ஏற்பட உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி தருமபுரியில் தெரிவித்தார். தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டம் ஈச்சம்பாடி பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணையில் இருந்து உபரிநீர் நீரேற்றும் திட்டத்தை செயல்படுத்த வலியுறுத்தி பாமக தலைவர் அன்புமணி தலைமையில் நேற்று ஈச்சம்பாடி அணை பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டத்தின்போது, ‘விவசாயிகளுக்கு பயனளிக்கும் எந்த திட்டத்தையும் திமுக அரசு செயல்படுத்தவில்லை. மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் உபரி நீர் திட்டம் உள்ளிட்ட பாசன திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படவில்லை’ என அன்புமணி பேசினார்.

ஆர்ப்பாட்ட முடிவில் அவர் செய்தியாளர்களிடம் கூறியது: இன்றுடன் பாமகவின் உரிமை மீட்பு பயணம் 100வது நாளை நிறைவு செய்கிறது. அதையொட்டி, ஈச்சம்பாடி அணைக்கட்டு உபரி நீரை நீரேற்றம் செய்து 60 ஏரிகளுக்கு நிரப்பும் திட்டம் கோரி விவசாயிகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளோம். இந்த திட்டம், கூடுதலாக 8,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி வழங்கும்.

தமிழகத்துக்கு ரூ.11 லட்சத்து 32 ஆயிரம் கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு 34 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என முதல்வர் கூறும் தகவல்கள் அனைத்தும் பொய். தற்போதுவரை தமிழகத்துக்கு ரூ.1 லட்சம் கோடிக்கு கூட முதலீடுகள் ஈர்க்கப்படவில்லை. இந்த உண்மைகளை தெரியப்படுத்தும் வகையில் பாமக சார்பில் தயாராகி வரும் புத்தகம் விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. அண்மையில் கோவையில் நடந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்துக்கு குடிபோதை தான் முக்கிய காரணம்.

இந்தியாவிலேயே போதை பொருள் பயன்பாட்டில் பஞ்சாப் மாநிலம் முதலிடத்திலும், பின்னர் கேரள மாநிலம் முதலிடத்திலும் இருந்தது. தற்போது தமிழ்நாடு போதைப்பொருள் புழக்கத்தில் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவில் கிடைக்கக்கூடிய அனைத்து போதை பொருட்களும் தமிழகத்தில் கிடைக்கிறது.

தேர்தலின்போது பணத்தை கொடுத்து வாக்காளர்களை விலைக்குவாங்கிவெற்றிபெறலாம் என கணக்குபோடும் திமுகவுக்கு தகுந்த பாடம் புகட்டுவோம். எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என்ற திமுகவின் எண்ணம் நிறைவேறாது. தமிழக அரசியலில் சில வாரங்களில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்படும். 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தோற்கடிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஈரோடு மாநகராட்சி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்... அமைச்சர் எம் எல் ஏ மேயர் பங்கேற்று. உதவிகள் வழங்கல்..



ஈரோடுநவ. 07

ஈரோடு மாநகராட்சி பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் அமைச்சர், எம் எல் ஏ மற்றும் மேயர் ஆகிய கலந்து கொண்டனர்

ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட பாரதியின் 50 மற்றும் 51 ஆகிய பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் இந்த சிறப்பு திட்ட முகாமில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகள் 45 நாட்களில் தீர்வு காணப்பட்டு வருகிறது.

இதனைத்தொடர்ந்து ஈரோடு மாவட்டம் ஈரோடு மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட 50 மற்றும் 51 வது வார்டு பகுதி பொது மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில், பொதுமக்கள் கலந்து கொண்டு பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை, மகளிர் உரிமைத்தொகை, மருத்துவ உதவிகள் கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கான மனுக்களை முகாமில் இருந்த அதிகாரிகளிடம் கொடுத்தனர்.

தொடர்ந்து இந்த முகாமில் அமைச்சர் சு. முத்துசாமி, எம் எல் ஏ வி. சி சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி. செல்வராஜ் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் கலந்து.

முகாமில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு உத்தரவு நகலை அமைச்சர் முத்துசாமி வழங்கினார். மேலும் பொது மக்களின் குறைகளை கேட்டறிந்த அவர் உரிய நடவடிக்கைகளை மேற்கோள் மாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்ப்பட 24,27 வார்டு பகுதிகளுக்கு தாரமங்கலம் நகராட்சி சமுதாய கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாட தேர்வுக்கு கூடுதல் இடைவெளி தேவை: ஆசிரியர்கள், மாணவர்கள் கோரிக்கை

சென்னை: நவ.7–

பத்தாம் வகுப்பு பிற பாடங்களுக்கான தேர்வுக்கு இடையே4முதல்9நாட்கள்இடைவெளிவிடப்பட்டுள்ளது. ஆனால் அதிக பாடங்கள் கொண்ட சமூக அறிவியல் பாடத்துக்கு மட்டும் 2 நாட்கள் மட்டுமே இடைவெளி உள்ளது. அந்த நாட்களில் திருப்புதல் செய்ய முடியாத நிலை உள்ளது. அதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிருப்தியில் உள்ளனர். சுமார் 27 பாடங்கள் கொண்ட சமூக அறிவியல் பாடங்களை 2 நாள் விடுமுறையில் திருப்புதல் செய்ய முடியாது. அதனால் மாணவர்கள் தேர்ச்சி வீதம் குறையும் அபாயம் உள்ளது என்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அனைத்து மாணவர்களும் சமூக அறிவியல் பாடத்தில் 100 சதவீதம் தேர்ச்சி பெற உதவும் வகையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள தேர்வு அட்டவணையில் உரிய திருத்தம் செய்து சமூக அறிவியல் பாடத் தேர்வுக்கு முன்னதாக கூடுதலாக 2 நாட்கள் விடுமுறை அறிவிக்க பள்ளிக் கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## புதுச்சேரி சமூக ஆர்வலர் புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு



புதுச்சேரி, நவ. 7–

தற்போது இந்தியா முழுவதும் வாக்காளர் பட்டியலில் திருத்தும் மற்றும் சரிபார்ப்பு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது புதுச்சேரி மாநிலத்தில் அந்தப் பணி தாங்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது தற்போது அந்த பணியில் ஈடுபட்டிருக்கும் அரசு ஊழியர்கள் அந்தந்த பகுதியில் வேலை செய்யும் அங்கன்வாடி ஊழியரை வைத்து சில பகுதிகளில் கணக்கெடுக்கும் பணியும் சரிபார்ப்பு பணியும் நடைபெறுகிறது பல இடங்களில் தேர்தல் துறைமூலம் அங்கன்வாடி ஊழியர்கள் இல்லாமல் நேரடியாக அரசு ஊழியர்கள் சரிபார்ப்பு பணியில் விண்ணப்பம் கொடுக்கிறார்கள் அப்படி நேரடியாக அவர்கள் கொடுக்கும் போது சம்பந்தப்பட்டவர்கள் அந்த வீட்டில் இருந்தால் மட்டுமே கொடுக்க முடியும் என்று வாதிடுகிறார்கள் புதுச்சேரியில் வாக்காளர்களின் பாதிப்பேர் வாடகை வீட்டில் வசிப்பவர்கள் தான் அவர்கள் நிரந்தரமாக அங்கு தற்போது இருக்க முடிவதில்லை அப்படி இருக்கும் பட்சத்தில் ஒருவர் இரண்டு வருடத்தில் வேறு வீட்டுக்கு குடி போயிருகிறார் ஆனால் அந்த பழைய விலாசத்தில் வரும் அலுவலர்கள் இருந்தால் மட்டுமே கொடுக்க முடியும் இல்லையென்றால் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள் அது புதுச்சேரியில் வாடகை வீட்டில் வசிப்பவர்களின் வாக்குரிமையை பறிக்கும் செயல் போல் உள்ளது அதனால் தற்போது வாக்கு படிவங்களை கொடுக்கும்போது அவர்கள் வேறு விலாசத்தில் வசிப்பதாக இருந்தால் அவர்களுக்கு நேரடியாக வந்து கொடுக்கும்போது படிவத்தை வடிவத்தின் பின்பக்கத்தில் தற்போது இருக்கும் விலாசத்தை முழுமையாக எழுதி படிவங்களை கொடுக்க வேண்டும் அப்படி கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் தற்போது இருக்கும் வீட்டிற்கு வரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க உதவியாக அந்த விலாசத்தை வைத்து மாற்றி விடுங்கள் அதை விடுத்து அந்த விலாசத்தில் இருந்தால் மட்டுமே வடிவம் கொடுக்கப்படும் இல்லையென்றால் கொடுக்க முடியாது என்பது சொல்வது இந்திய குடிமகனாக வாக்குரிமை பறிப்பது மிகவும் தவறான குற்றச் செயலாகும் அதனால் மாவட்ட ஆட்சியர் மாவட்ட தேர்தல் அதிகாரி ஆகிய நீங்கள் இதனை தயவு கூர்ந்து பரிசிளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்...

இவ்வாறு அசோக் ராஜா அந்த கடிதத்தில் கூறியிருந்தார்.

# அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்களுக்கு டெபாசிட் தொகை: அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு!

சென்னை: நவ. 7–

அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டங்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகளை வகுப்பது தொடர்பாக இன்று நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அரசு முன்மொழிந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரச்சார கூட்டங்கள், பொதுக் கூட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மூத்த அமைச்சர்கள் தலைமையில் அனைத்துகட்சி ஆலோசனை கூட்டமானது சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் மாளிகையில் நடைபெற்றது. அதில் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்நிலையில் அரசியல் பொதுக்கூட்டங்கள், பரப்புரைகளுக்கு நிபந்தனைகளுடன் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும் பொதுசொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டால் அபராதம் வசூலிக்கப்படும் என்றும் பொதுக்கூட்டங்கள், பரப்புரைகளை கண்காணிக்க குழு அமைப்படும் என்றும், மக்களின் எண்ணிக்கைக்குஏற்பகூட்டத்தில் போலீசாரை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பொதுக்கூட்டங்களை கண்காணிக்க மற்றும் அனுமதிவழங்ககுழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசியல் நிகழ்ச்சிக்கு முன் 2 மணிநேரத்திற்குமேல் மக்கள் காத்திருப்பதை தவிர்க்க வேண்டும் என்றும், பொதுக்கூட்டங்கள், ரோடு ஷோக்களை 3 மணிநேரத்திற்குள் நடத்தி முடிக்கவேண்டும் என்றும் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் கூட்டங்கள் நடத்த 10 நாட்களுக்கு முன்பும் 15 நாட்களுக்கு மிகாமல் அனுமதி கோர வேண்டும்என்றும்அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு டெபாசிட் தொகை நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி 5,000 முதல் 10,000 பேர் வரை கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு ரூ.1 லட்சம் டெபாசிட் தொகையாகநிர்ணயம்செய்யப்பட்டுள்ளது. 50,000 பேருக்கு மேல் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு ரூ.20 லட்சம் டெபாசிட் தொகையாக நிர்ணயிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## எஸ்ஐஆர் பணிகள் குறித்து இந்திய தேர்தல் துணை ஆணையர் ஆய்வு: 11 மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்பு

மதுரை கலெக்டர் அலுவலகத்தில் எஸ்ஐஆர் பணிகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையர் இன்று ஆய்வு செய்தார். இதில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி மற்றும் 11 மாவட்ட கலெக்டர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் கடந்த 4ம் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) மேற்கொள்ளும் பணி நடந்து வருகிறது. இதற்காக வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று விண்ணப்பங்கள் வழங்கி வருகின்றனர். இந்நிலையில், எஸ்ஐஆர் எனப்படும் இப்பணி தொடர்பான மண்டல ஆய்வுக்கூட்டம், மதுரை கலெக்டர் அலுவலகத்தில் இன்று நடந்தது. கூட்டத்திற்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் பானு பிரகாஷ் யெட்டூரு, இந்திய தேர்தல் ஆணைய இயக்குநர் கே.கேதிவாரி ஆகியோர் தலைமை வகித்தனர். இதில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், மாவட்ட தேர்தல் அலுவலர்களாக மதுரை கலெக்டர் பிரவீன்குமார், சிவகங்கை கலெக்டர் பொற்கொடி, ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன், தேனி கலெக்டர் ரஞ்ஜீத் சிங், திண்டுக்கல் கலெக்டர் சரவணன், விருதுநகர் கலெக்டர் சுகபுத்ரா, தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத், நெல்லை கலெக்டர் சுகுமார், தென்காசி கலெக்டர் கமல்கிஷோர், கன்னியாகுமரி கலெக்டர் அழகுமீனா, புதுக்கோட்டை கலெக்டர் அருணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில், எஸ்ஐஆர் திருத்த பணிகளை மேற்கொள்வது, புதிய வாக்காளர்சேர்த்தல்உள்ளிட்டவைகுறித்துவிவாதிக்கப்பட்டது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421